திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, இலந்தையம்பலம் பக்கத்திலே உள்ள கண்ணன்னூர் என்ற இடத்திலிருக்கும் பாலத்தைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி ஆண்டிலேயே அது செய்து முடிக்கப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தமெல்லாம் 10-2-82-லே முடிந்து வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

திரு. டி. மணி: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குத் தேவையான பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்தார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 5 இலட்சம் ரூபாய் போதுமா என்ற கேள்விக் குறி எழுகிறது. காரணம், குறுகலான பாலமாக இருந்தாலும் போக்குவரத்து வண்டிகள் போகும்பொழுது இருமருங்கிலும் உராய்ந்து கொண்டு போகும் காட்சியைப் பார்க்கிறோம். 5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்றால் அது 22 அடி அல்லது 30 அடி அகலமாக இந்தப் பாலம் இருக்குமா? இதை அந்தத் தொகையில் செய்ய முடியுமா? அதேபோன்று நீண்ட நெடுங்காலத்திற்கு முன், ஏற்கனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்று பார்த்து வந்த பன்னிப்பாலம், இன்னொரு பாலம் ஆகியவை இருக்கின்றன. ஆகவே, இதை அகலப்படுத்தி முறையாகச் செய்து முடிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, குறுகிய பாலமாக இருந்த காரணத்தால்தான் ஏற்கனவே இருந்த பாலம் மூன்று மீட்டர் அகலமுள்ளது. பெரிய பாலமாக அமைக்க வேண்டுமென்று 5 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோதும் என்று தான் பொறியாளர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையில் வேலை தொடங்கப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பாலம் நான் நேரிலே பார்த்த பாலம், அதை அடுத்த ஆண்டிலே எடுத்துக் கொள்ளலாம்.

நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்ட குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கும் திட்டம்.

*வினா எண். 686—திரு. குமரி அனந்தன்; திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களைத் தூய்மையாக வைத்திருக்க சுவரொட்டிகள் ஒட்டுவதற்கென குறிப்பிட்ட இடங்கள் தேர்வு செய்யப்படுமா?

1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளம்பரங்கள் செய்ய குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப் பட்டு அங்கு நிலையாக அமைக்கப்படும். சிமெண்ட் பலகைகள் போன்றவைகள் மீது சுவரொட்டிகள் ஒட்டுவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கித் தனியரகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். எந்த நிகழ்ச்சிக்காக அந்தப் போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றனவோ அந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் அந்தப் போஸ்டரை ஒட்டியவர்களே அந்தப் போஸ்டரை எடுத்துவிட வேண்டுமென்றெல்லாம் விதியிருக் கின்றது. அப்படி இங்கேயும் செய்தால் அதிகமாக வருமானமும் வரும்; நகரத்தின் அழகும் கெடாது. எனவே, அப்படிப்பட்ட முறையில் தீவிரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாநகராட்சியினுடைய சட்ட விதிமுறைகளிலே இடம் இருக்கின்றது. அதன் அடிப்படையிலே சுவரொட்டிகளைக் குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் ஒட்டவேண்டும். ஆனால் அதே நேரத்தில் மாநகராட்சியின் அனுமதியைப் பெற்றுத்தான் சுவரொட்டிகளை ஒட்டவேண்டும். இல்லை என்றால் அதற்குக் கருப்பு சாயம் பூசப்பட்டு, அந்த சுவரொட்டிகளை யார் யரர் ஒட்டுகிறார்களோ அந்த இடத்தில், அது படமாக இருந்தாலும், விழாவாக இருந்தாலும் அது நிறுத்தப்பட்டுவிடுகிறது. அதன் மூலம் இப்போது வருமானம் அதிகரித்து இருக்கிறது. முக்கிய மாக இதுபோன்ற நிலையை உருவாக்குவதன் மூலம் இன்னும் வருமானம் அதிகமாக ஆகின்ற நிலையில் நடைமுறையில் சில தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, குறிப்பாகத் தேர்தல் நேரங்களிலே சுவர்களைப் பிடிப்பதற்காக கண்ட கண்ட இடங்களில் போஸ்டர்களை ஒட்டி சுவர்களை அசிங்கப்படுத்தி விடுகிறார்கள். சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுவர் களைப் பிடிப்பதற்கு முந்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட போஸ்டர் சண்டைகளை ஒழிப்பதற்காக விதிமுறை களை அரசு உடனடியாக கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இங்கே இந்த மன்றத்தில் எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நாம் இங்கே அப்படிப்பட்ட விதிமுறைகளை அனுஷ்டித்தாலும் கூட அப்படிப்பட்ட போஸ்டர்களை யார் யார்

ஒட்டுகிறார்கள் என்பது அந்தந்த அரசியல் கட்சிகளுக்குத்தான் தெரியும். ஆகவே, நான் மாமன்றத்தின் உறுப்பினர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது ஒதுக்குப்புறமாக அதுவும் குறிப்பாக பொது ஸ்தாபனங்களில் அங்கே இருக்கக்கூடிய சுவர்களைக் கெடுக்காமல், நல்லமுறையில் போஸ்டர்கள் ஒரே இடத்தில்தான் ஒட்டவேண்டும் என்று விதிமுறைகளை நாம் அனுஷ்டிக்க வேண்டும். அப்போதுதான் இவைகள் எல்லாம் சரியான முறையிலே நடைபெறுமே தவிர' இல்லை என்றால் கண்டிப்பாக நடைபெறாது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலேகூட இப்படிப்பட்ட ஆபாசமான சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். அதுபோக யார் யாருக்கோ சொந்தமான வீடுகளில் சுவரொட்டிகளை ஒட்டினால், மாநகராட்சி இதற்கும் கட்டணம் வசூலிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்றி, பொது இடங்களில் அரசியல், சமூக இயல் போன்ற போஸ்டர்களை போக்குவரத்து இடைஞ்சல் இல்லாத பகுதிகளிலே மட்டும் திரைப்படம் போன்ற ஆபாசம் இல்லாத சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆபாசம் என்பது அவரவர்களுடைய கண்களைப் பொருத்தது. ஏனென்றால் நாம் பார்க்கின்ற நேரத்தில் ஒரு சிலருக்கு அது ஆபாசமாக இருக்கலாம். ஆனால் அதே ஆபாசம் வேறு சிலருக்கு அது கலை உணர்வு அளிக்கக்கூடிய அளவுக்கும் இருக்கலாம். ஆனால் ஒட்டுகின்றவிளம்பரச் சுவரொட்டிகள் ஆங்காங்கே ஒட்டுகின்றபோது இதுபோன்ற நிலை உருவாகக்கூடாது என்று ஏற்கனவே விதிமுறைகள் இருக்கின்றன, சட்டங்கள் இருக்கின்றன. அவைகள் தடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல எந்தெந்த இடங்களில் இதுபோல ஆபாசமான சுவரொட்டிகள் இருக்கின்றன என்று சொன்னால் உடனடியாக அதற்கு ஏற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வள்ளியாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் திட்டம்.

* வினா எண். 687—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகா தளக்குளம் என்ற ஊரில் ஏற்கனவே இருந்த வள்ளியாற்றுப் பழைய பாலம் புதிதாக கட்டுவதற்காக இடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் இன்னமும் புதிய பாலம் கட்டுவதற்கான பணிகள் துவக்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா?